# மே– 11 – சனி

**மீட்பின் கிண்ணத்தைக் கையில் எடுத்து, ஆண்டவரது பெயரைத் தொழுவேன். திபா. 116:13**

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி 9 : 31 – 42

அந்நாட்களில் யூதேயா, கலிலேயா, சமாரியா ஆகிய பகுதிகளிலெல்லாம் திருச்சபை வளர்ச்சியுற்று, ஆண்டவருக்கு அஞ்சி நடந்து, அமைதியில் திளைத்து, தூய ஆவியாரின் துணையால் பெருகிவந்தது. ‘பேதுரு எல்லா இடங்களுக்கும் சென்று வந்தார் ஒருநாள் லித்தாவில் வாழ்ந்த இறைமக்களிடம் வந்து சேர்ந்தார்.அங்கே அவர் எட்டு ஆண்டுகள் முடக்குவாதத்தால் படுக்கையில் கிடந்த ஐனேயா என்னும் பெயருடைய ஒருவரைக் கண்டார்அவரிடம், ”ஐனேயா, இயேசு கிறிஸ்து உம் பிணியைப் போக்குகிறார் எழுந்து உம் படுக்கையை நீரே சரிப்படுத்தும்” என்று பேதுரு கூறினார். உடனே அவர் எழுந்தார்.லித்தாவிலும் சாரோனிலும் வாழ்ந்து வந்தவர்கள் அனைவரும் அதைக்கண்டு ஆண்டவரிடம் திரும்பினார்கள்.யோப்பா நகரில் தபித்தா என்னும் பெயருடைய பெண் சீடர் ஒருவர் இருந்தார். அவர் தொற்கா என்றும் அழைக்கப்பட்டார் நன்மை செய்வதிலும் இரக்கச் செயல்கள் புரிவதிலும் அவர் முற்றிலும் ஈடுபட்டிருந்தார்.உடல்நலம் குன்றி ஒருநாள் அவர் இறந்துவிட்டார். அங்கிருந்தோர் அவரது உடலைக் குளிப்பாட்டி மேல் மாடியில் கிடத்தியிருந்தனர்.யோப்பாவிற்கு அருகிலுள்ள லித்தாவுக்குப் பேதுரு வந்திருப்பதைச் சீடர்கள் கேள்விப்பட்டு இருவரை அவரிடம் அனுப்பி, ”எங்களிடம் உடனே வாருங்கள்” என்று கெஞ்சிக் கேட்டார்கள்.பேதுரு புறப்பட்டு அவர்களோடு வந்தார். வந்ததும் அவர்கள் அவரை மேல்மாடிக்கு அழைத்துச் சென்றார்கள். கைம்பெண்கள் அவரருகில் வந்து நின்று, தொற்கா தங்களோடு இருந்தபோது செய்துகொடுத்த எல்லா அங்கிகளையும் ஆடைகளையும் காண்பித்தவாறே அழுதார்கள்.பேதுரு அனைவரையும் வெளியே அனுப்பிவிட்டு முழந்தாள்படியிட்டு இறைவனிடம் வேண்டினார் அவரது உடலின் பக்கமாகத் திரும்பி, ”தபித்தா, எழுந்திடு” என்றார். உடனே அவர் கண்களைத் திறந்து பேதுருவைக் கண்டு, எழுந்து உட்கார்ந்தார்.பேதுரு அவருடைய கையைப் பிடித்து எழுந்து நிற்கச் செய்தார். இறைமக்களையும் கைம்பெண்களையும் கூப்பிட்டு, அவர்கள் முன் அவரை உயிருடன் நிறுத்தினார்.இது யோப்பா நகர் முழுவதும் தெரிய வரவே ஆண்டவர் மீது பலர் நம்பிக்கை கொண்டனர்.

**பதில்பாடல் :** ஆண்டவர் செய்த நன்மைகளுக்காக என்ன
கைம்மாறுசெய்வேன்?

## நற்செய்தி : யோவான் 6 : 60 – 69

அக்காலத்தில் இயேசு நிலைவாழ்வு அளிக்கும் உணவுபற்றிக் கற்பித்துக்கொண்டிருந்த போது சீடர் பலர் இதைக்கேட்டு, ”இதை ஏற்றுக் கொள்வது மிகக்கடினம் இப்பேச்சை இன்னும் கேட்டுக்கொண்டிருக்க முடியுமா?” என்று பேசிக்கொண்டனர். இதுபற்றித் தம் சீடர் முணுமுணுப்பதை இயேசு உணர்ந்து அவர்களிடம், ”நீங்கள் நம்புவதற்கு இது தடையாய் இருக்கிறதா? அப்படியானால் மானிடமகன் தாம் முன்பு இருந்த இடத்திற்கு ஏறிச் செல்வதை நீங்கள் கண்டால் அது உங்களுக்கு எப்படி இருக்கும்?. வாழ்வு தருவது தூய ஆவியே ஊனியல்பு ஒன்றுக்கும் உதவாது. நான் கூறிய வார்த்தைகள் வாழ்வுதரும் ஆவியைக் கொடுக்கின்றன.அப்படியிருந்தும் உங்களுள் சிலர் என்னை நம்பவில்லை” என்றார். நம்பாதோர் யார், யார் என்பதும் தம்மைக் காட்டிக்கொடுக்கவிருப்பவன் யார் என்பதும் இயேசுவுக்குத் தொடக்கத்திலிருந்தே தெரிந்திருந்தது.மேலும் அவர், ”இதன் காரணமாகத்தான் “என் தந்தை அருள் கூர்ந்தால் அன்றி யாரும் என்னிடம் வர இயலாது” என்று உங்களுக்குக் கூறினேன்” என்றார். அன்றே இயேசுவின் சீடருள் பலர் அவரை விட்டு விலகினர். அன்று முதல் அவர்கள் அவரோடு சேர்ந்து செல்லவில்லை.இயேசு பன்னிரு சீடரிடம், ”நீங்களும் போய்விட நினைக்கிறீர்களா?” என்று கேட்டார்.சீமோன் பேதுரு மறுமொழியாக, ”ஆண்டவரே நாங்கள் யாரிடம் போவோம்? நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன.நீரே கடவுளுக்கு அர்ப்பணமானவர் என்பதை நாங்கள் அறிந்து கொண்டோம். அதை நம்புகிறோம்” என்றார்.

**தியானம்:** கடவுளின் பிரசன்னத்தையும் அவரது செயற்பாடுகளையும் அவரது வார்த்தையின் வழியாக நாம் அறிகிறோம். அவ்வாறே கடவுளுடைய வார்த்தை நமக்கு நிலைவாழ்வை பெற்றுத்தரும் கருவியாகவும் உள்ளது. ஆண்டவரே நாங்கள் யாரிடம் போவோம் நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன என்கிறார் பேதுரு. இறைவார்த்தை ஆற்றல் மிக்கது. வாழ்வு தருவது. நீங்கள் என்னுள்ளும் என் வார்த்தைகள் உங்களுள்ளும் இருந்தால் நீங்கள் விரும்பிக் கேட்பதெல்லாம் கிடைக்கும். (யோவான 15:7) என்கிறார் இயேசு. மனிதர்களுள் மறைந்து கிடக்கும் ஆற்றலை வெளிப்படுத்தி அவர்களை மாற்றும் ஆற்றல் இறைவார்த்தைக்கு உண்டு. இயேசுவே அவ்வார்த்தை. “வார்த்தை மாமிசமாகி எங்களுடனே குடிகொண்டது”. கடவுளின் பிரசன்னத்தை புதிய பரிமானத்தில் உலகிறகிற்கு கொண்டு வருபவர் இயேசுவே. ஆகவேதான் அவரைச் சார்ந்தவர்களாக, அவரது குரலைக் கேட்பவர்களாக இருப்போம். அவரது திருவுளத்தை அறிது வாழ முயற்சிப்போம். நல்லாயனாம் இயேசு நம்மை வழிநடத்துவார். நிலைவாழ்வின் பாதையில் நம்மை நடத்திச் செல்வார்.